# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மருத்துவம் (திருத்தம்)

**(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தினைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் அவர்களால்*
*2018, யூலை மாதம் 17 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, திசெம்பர் மாதம் 12 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **257 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, மருத்துவப் பேரவையினுள் மூன்று மருத்துவ நிபுணர்களையும் ஒரு (1) பல் மருத்துவ நிபுணரையும் உள்ளடக்குவதன் மூலம் அத்தகைய பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, மருத்துவ மற்றும் பல் மருத்துவ நிபுணர்களின் பெயர்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்றை வைத்திருப்பதற்கு மருத்துவப் பேரவையின் பதிவேட்டை இயலச்செய்கின்ற ஏற்பாடுகளை ஆக்குவதற்குமாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 39அ, 39ஆ மற்றும் 39இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றதென்பதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது -

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்கு மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணர் ஒருவருக்கு தேவைப்படும் தகைமைகளினை குறித்துரைப்பதற்கும்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட தகைமைகளுடன் மருத்துவ மற்றும் பல் மருத்துவ நிபுணர்களைப் பதிவுசெய்வதற்கு மருத்துவப் பேரவைக்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன்

(இ) மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணர் ஒருவராக தொழில்புரிவதை கட்டாயமாக்குவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழான பதிவைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்,

ஆகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, "மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் தகவுடைமைக் கட்டளைக் கற்கள்", "மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்புகள்" மற்றும் "மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்" என்னும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணங்களை உள்ளடக்குவதற்குமாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னர் அந்தந்த விசேட துறைகளில் தொழில்புரிவதில் ஈடுபட்டுள்ள மருத்துவ மற்றும் பல் மருத்துவ நிபுணர்களை பன்னிரெண்டு (12) மாதங்கள் காலப்பகுதியினுள் பதிவுசெய்வதை இயலச்செய்வதற்கு ஏற்பாடுகளை செய்கின்றது.

ச.வ.- ஓ. 55/2015

**(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மருத்துவம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், (இ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- *105 ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

"(இஇ) பிரிவு 39அ வின் (1) ஆம், (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மருத்துவ நிபுணர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்;

(இஇஇ) பிரிவு 39அ வின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பல்மருத்துவ நிபுணர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர்;".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில், (அ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

"(அஅ) பிரிவு 39அ வில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை ஒன்றைக் கொண்டுள்ளவரும் பிரிவு 39ஆ வின்கீழான பதிவை பெற்றுக்கொண்டுள்ளவருமான ஒவ்வொரு

மருத்துவ நிபுணரினதும் பல்மருத்துவ நிபுணரினதும் பெயர்களைக் கொண்டுள்ள மருத்துவ மற்றும் பல்மருத்துவ நிபுணர்களின் பதிவேடு ஒன்று;".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 39அ, 39ஆ மற்றும் 39இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 39அ, 39ஆ மற்றும் 39இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"மருத்துவ அல்லது பல்மருத்துவ நிபுணர் ஒருவராக பதிவு செய்வதற்குத் தேவைப்படும் தகைமைகள்.

39அ. (1) மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு விசேட மருத்துவ அலுவலர் தரத்திற்கு தேவைப்படும் தகைமை ஒன்றைக் கொண்டுள்ள, 29 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவர் 39ஆ என்னும் பிரிவின்கீழ் மருத்துவ நிபுணர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(2) மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு விசேட மருத்துவ அலுவலர் தரத்திற்குத் தேவைப்படும் தகைமை ஒன்றைக் கொண்டுள்ள 43 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட பல்மருத்துவர் ஒருவர் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பல்மருத்துவ நிபுணர் ஒருவராக பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(3) இலங்கை தவிர்ந்த வேறு நாடொன்றில் விசேட பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து கொண்டுள்ளவரும் அந்தந்த விசேட துறையில் தொழில் புரிவதற்கு மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் தகவுடைமை கட்டளைக்கற்களைத் திருப்திப்படுத்துகின்ற விசேட மருத்துவ அல்லது பல்மருத்துவ தகைமை ஒன்றைப் பெற்றுக் கொண்டுள்ளவருமான 29 ஆம் பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தொழிலர் ஒருவர் அல்லது 43 ஆம் பிரிவின்கீழ்

பதிவுசெய்யப்பட்ட பல்மருத்துவர் ஒருவர் விடயத்திற்கேற்ப, 39ஆ என்னும் பிரிவின் கீழ் மருத்துவ அல்லது பல்மருத்துவ நிபுணர் ஒருவராக பதிவுசெய்யப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(4) மருத்துவப் பேரவையினால் அங்கீகரிக்கப் பட்ட ஏதேனும் பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது இலங்கை தவிர்ந்த வேறு ஏதேனும் நாட்டின் மருத்துவ அல்லது பல்மருத்துவ பாடசாலையி லிருந்து மருத்துவத்தில் அல்லது பல்மருத்துவத்தில் பட்ட மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை ஒன்றை பெற்றுள்ளவரும் அந்தந்த விசேட துறையில் தொழில் புரிவதற்கு மருத்துவப் பட்டப்பின் படிப்பு மருத்துவ நிறுவகத்தின் தகவுடைமை கட்டளைக்கற்களை திருப்திப்படுத்துகின்றவருமான எவரேனும் ஆள் விடயத்திற்கேற்ப 39ஆ என்னும் பிரிவின் கீழ் மருத்துவ அல்லது பல்மருத்துவ நிபுணர் ஒருவராக பதிவுசெய்யப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

*மருத்துவ அல்லது பல்மருத்துவ நிபுணர் ஒருவராகப் பதிவுசெய்தல்.*

39ஆ. பிரிவு 39அ வில் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட மருத்துவ அல்லது பல்மருத்துவ தகைமை களில் ஏதேனும் ஒன்றைக் கொண்டுள்ள எவரேனும் மருத்துவத் தொழிலர், பல்மருத்துவர் அல்லது ஆளொருவர்–

(அ) அவர் நன்னடத்தை உடையவராயின்; அத்துடன்

(ஆ) (i) பிரிவு 39அ வின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை ஒன்றைக் கொண்டுள்ள மருத்துவத் தொழிலர் ஒருவரின் விடயத்தில், 29 ஆம் பிரிவின்கீழ் அவர் பதிவுச் சான்றிதழ் ஒன்றைக் காண்பித்தால் ; அல்லது

(ii) பிரிவு 39அ வின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை ஒன்றைக் கொண்டுள்ள பல்மருத்துவர் ஒருவரின் விடயத்தில், 43 ஆம் பிரிவின்கீழ் அவர் பதிவுச்சான்றிதழ் காண்பித்தால் ; அல்லது

(iii) பிரிவு 39அ வின் 3 ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை ஒன்றைக் கொண்டுள்ள மருத்துவத் தொழிலர் ஒருவரின் அல்லது பல்மருத்துவர் ஒருவரின் விடயத்தில், 29 ஆம் பிரிவின்கீழ் அல்லது 43 ஆம்பிரிவின்கீழ் அவர் பதிவுச் சான்றிதழ் ஒன்றைக் காண்பித்தால் ; அல்லது

(iv) பிரிவு 39அ வின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை ஒன்றைக் கொண்டுள்ள ஆளொருவரின் விடயத்தில், சபையின் சான்றுபடுத்துகைக்காகத் தேவைப்படும் தற்காலிக சான்றிதழை அவர் பெற்றிருந்தால் ; அத்துடன்

(இ) விடயத்திற்கேற்ப, மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் தகவுடைமை கட்டளைக்கற்களைத் திருப்திப்படுத்துவதன்மேல், மருத்துவப்பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சபையின் சான்றளிப்பு அல்லது சபையின் சான்றளிப்பு தொடர்பிலான தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழ் ஒன்றை அவர் காண்பித்தால்,

பதிவுசெய்தலுக்கான விதித்துரைக்கப்பட்ட கட்டணத் துடன் சேர்த்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் மருத்துவப் பேரவைக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத் தின்மேல், அந்தந்த மருத்துவ அல்லது பல்மருத்து வத்துறையில் மருத்துவ நிபுணர் ஒருவராக அல்லது பல் மருத்துவ நிபுணர் ஒருவராக பதிவுசெய்யப்படு தல் வேண்டும்.

*ஆளெவரும் பதிவு இன்றி மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணர் ஒருவராக தொழில் புரிதலாகாது.*

39இ. ஆளெவரும் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணர் ஒருவராக அல்லாதிருந்து கொண்டு, 39அ என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை ஒன்றைக் கொண்டுள்ளவரான மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணராக தாம் உள்ளாரென உட்கிடையாக அல்லது நம்புவதற்கு இட்டுச் செல்கின்ற ஏதேனும் பெயரை, தலைப்பை அல்லது சேர்ப்பை எடுத்தலோ அல்லது பயன்படுத்துதலோ அல்லது ஏதேனும்செயல் அல்லது செய்யாமைமூலம் 39ஆ என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணராக தாம் உள்ளாரென நம்புவதற்கும் மற்றும் அத்தகைய நம்பிக்கையின்மீது செயலாற்றுவதற்கும் எவரேனும் ஆளை வேண்டுமென்று செய்வித்தலோ அனு மதித்தலோ ஆகாது.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவானது இத்தால் திருத்தப்படுகின்றது.

(1) “தோட்ட அப்போதிக்கரி” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் சொல் லமைப்பை உட்புகுத்துவதன்மூலமும்:-

““மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் தகவு டைமை கட்டளைக்கற்கள்” என்பது, 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவ பட்டப்பின்

படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் அந்தந்த கற்கைச் சபையினால் விதந்துரைக் கப்பட்ட அந்தந்த விசேட துறையில் சபை சான்றுபடுத்துகை தொடர்பில் சபை சான்று படுத்துகைக்கான அல்லது தராதர அங்கீகாரம் பற்றிய சான்றிதழிற்கான தகவுடைமைக் கட்டளைக்கற்கள் எனப் பொருளாகும்;";

(2) "மருத்துவத் தொழிலர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் சொல்ல மைப்பினை உட்புகுத்துவதன்மூலமும்:-

" "மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்பு" என்பது, காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் 11 ஆந் தேதிய 1883/17 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப் பட்ட மருத்துவசேவை பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்;";

(3) "வாகடர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை உடனடுத்துப் பின்வரும் சொல்லமைப்பினை உட்புகுத்துவதன்மூலமும்:-

" "மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்" என்பது, காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் 10ஆந் தேதிய 83/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 1980ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் எனப் பொருள்படும்;".

தொழில் புரிவதில் ஈடுபட்டுள்ள மருத்துவ மற்றும் பல் மருத்துவ நிபுணர்களிற்கு ஏற்புடையற் பாலதான நிலை பெயர்கால ஏற்பாடு.

**6.** இச்சட்டம் தொடங்கும் தேதியன்று 39ஆ என்னும் பிரிவின்கீழ் மருத்துவ அல்லது பல் மருத்துவ நிபுணர் ஒருவராக பதிவு செய்யப் படுவதற்கு தகவுடைய ஏதேனும் தகைமையைக் கொண்டுள்ளோரும் அத்தேதிக்கு முன்னர் அந்தந்த விசேட துறையில் தொழில்புரிவதில் ஈடுபட்டுள்ளவருமான மருத்துவ தொழிலர் அல்லது பல் மருத்துவர் ஒவ்வொருவரும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் காலப்பகுதி ஒன்றினுள் 39ஆ என்னும் பிரிவின் கீழ் பதிவைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.